தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 அக்டோபர் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 126, 127, 128 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

பழையனூருக்கு மருத்துவ மனை

* 129 **வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பழையனூர் கிராமத்தில் மருத்துவ மனை ஒன்று நடத்த அண்மையில் அனுமதி கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) கேட்கப்பட்ட அனுமதி அந்த மருந்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திருப்புவனம் அரசு மருத்துவ மனை

* 130 **வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1975 அக்டோபர் 30

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் அரசு மருத்துவ மனைக்கு நோயாளிகள் தங்குவதற்கு போதுமான கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

மாயூரம் அரசு மருத்துவ மனை.

* 131 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இருதய பரிசோதனைப் பிரிவு ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மாயூரம் அரசினர் மருத்துவ மனை, தாலுக்கா தலைநகரத்தில் இருக்கக் கூடிய மருத்துவ மனையாகும். மாயூரம், மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ளவர்கள் இருதய பரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்றால் கும்பகோணம் அல்லது தஞ்சைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே, குறுகிய அளவுக்காவது அந்த முயற்சியினை மேற்கொண்டு, அத்தகைய இருதய பரிசோதனை செய்யக்கூடிய பிரிவு ஒன்றினை மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் ஏற்பாடு செய்வதற்கு இனிமேலாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது கும்பகோணத்தில் இருதய பரிசோதனை செய்துகொண்டார் என்று எனக்குத் தெரியாது. கும்பகோணம் போனாலும் கிடையாது. இப்பொழுது மருத்துவ மனைகளில், மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனைகளில் கூட எல்லா இடங்களிலும் ஏற்படுத்த இன்னும் வசதி இல்லை. ஆனால், மருத்துவப் பேராசிரியராகவுள்ள சிலர் இருதய பரிசோதனை செய்யும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்,